# R 5683 (Page 141)

# ஆவலைத் தூண்டும் கேள்வி
## Interestin Question
### *"தனது சொந்த இடத்திற்கே அவன் சென்றுவிட்டான்."*

***கேள்வி:*** *காவற் கோபுரத்தில் வந்த ஒரு கட்டுரையில் யூதாஸ் இரண்டாம் மரணத்தில் மரித்து விட்டான் என்று எழுதியிருந்ததை நான் படித்தேன். ஒரு தடவை தண்டனையி-ருந்து விடுதலை பெற்று, மரணத்தி-ருந்து ஜீவனுக்கு சென்று, கிறிஸ்துவுக்குள் இருந்து பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒருவன் இரண்டாம் மரணத்தில் மரிக்கக்கூடுமா?*

**பதில்**: யூதாசும் மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் அவர்கள் காலத்தில் இருந்த மற்ற யூதர்களைக் காட்டிலும் ஒரு விசேஷித்த இடத்தில் இருந்தனர். ஏனெனில் அவர்கள் மகா பெரிய ஒளியாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் தொடர்பு வைத்திருந்தார்கள். அந்த ஒளியை பார்த்தார்கள். அதை அவர்கள் பார்த்ததினால் அந்த அளவுக்கு பொறுப்புடையவர்களாயிருந்தார்கள். அவர்களில் யாராவது யூதாஸைப் போல் ஒளிக்கு விரோதமாக பாவம் செய்தால், அது மிகவும் கண்டிக்கப்படத்தக்கதாக இருக்கும். உண்மைதான், யூதாஸ் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாள் வரை யாரும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்க முடியாது. ஆனால் இது அவன் இரண்டாம் மரணத்தில் மரித்திருக்க முடியாது என்று நிரூபிக்காது. மாறாக, ஆயிரம் வருட யுகத்தில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பெற்றிராதவர்கள் இரண்டாம் மரணத்திற்கு, முற்றிலுமாக அழிக்கப்படுதலுக்கு செல்வார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்கள் சத்திய அறிவுக்குள் கொண்டுவரப்பட்டு, தேவனோடு கூட இணக்கத்திற்கு வரும்படி சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிற இந்த காரியத்தில் அவர்களுக்கு முழுபொறுப்பும் இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டால் அவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள். இல்லையென்றால் அவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் யூதாசுக்கு கொடுக்கப்பட்டது. நீண்ட காலம் அவன் அதற்கிசைவாக நடந்தான். ஆனால் அதன்பிறகு அவனுக்காக வைக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்களை விலக்கினான். தன்னை ஆதரித்தவருக்கு துரோகம் இழைப்பவன் என்பதை நிரூபித்தான். இந்த விஷயத்தில் இயேசுதான் நியாயாதிபதி. "கேட்டின் மகன்" (யோவான் 17:12) என்று அவனைக் கூறுகிற அவரது வசனம் நமக்கு இருக்கிறது. மேலும் அவர், அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் நலமாயிருக்கும் என்று அவர் கூறினார்.(மத்தேயு 26:24) யூதாசுக்கு ஆயிர வருட யுகத்தில் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் இந்த வசனம் உண்மையாக இருக்காது, அவன் தன் சொந்த இடத்திற்கே சென்றுவிட்டான் என்று வேதம் கூறுகிறது. (அப் 1:25) அவனது இடம் பரலோகம் அல்ல; ஏனெனில் இன்னும் யாருக்கும் அது திறக்கப்படவில்லை; அவனது இடம் திரும்ப கொடுக்கும் காலம் அல்ல, ஏனெனில் இன்னும் அது வரவில்லை. அவனது சொந்த இடம் என்பது அப்பொழுது திறக்கப்பட்டிருந்த ஒரே இடமாகிய இரண்டாம் மரணம்தான்.

## சபையின் தற்கால நிலை

இயேசுவின் மீட்கும் ப-, மீட்கும் விலைக்கிரயம் இன்னும் கொடுக்கப்படவில்லை அல்லது உலகின் முழு மனுக்குலத்திற்கும் இன்னும் உபயோகிக்கப்படவில்லை. அகில உலகமும் மீட்கப்படுவது அவரது கைகளில் இருக்கிறது.அகில உலகமும் இன்னும் நமது கர்த்தரின் கைகளில் வரவில்லை. எனினும் அந்த காலம் சமீபமாயிருக்கிறது என்று நாம் நம்புகிறோம். அப்பொழுது அந்த ப-யின் பலத்தின் மூலமாக அவர் பிதாவிடம் கேட்பார். பிதாவானவர் "அப்பொழுது ஜாதிகளை சுதந்திரமாகவும், பூமியின் எல்லைகளை சொந்தமாகவும்" கொடுப்பார். (சங்கீதம் 2:8) அதுவே மீட்கும் விலைக்கிரயத்தை அவர் கொடுக்கும் காலமாக இருக்கும். அவர் மரித்தபோது மீட்கும் விலைக்கிரயத்தை அவர் அளித்தார், ஆனால் இன்னும் அதை பிரயோகிக்கவில்லை. உலகம் இன்னும் தண்டனைக்குக் கீழாகவே இருக்கிறது. சபை மட்டுமே அந்த தண்டனையி-ருந்து இதுவரை தப்பித்துக்கொண்டிருக்கிறது.

இன்னும் பிரயோகிக்கப்படாத மீட்கும் பொருளின் புண்ணியங்களின் சாட்டுத-ன் மூலம் சபையானது அந்த தண்டனையி-ருந்து தப்பித்திருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளி-ருந்து சுவிசேஷ யுகம் முழுவதும், சபையானது கிறிஸ்துவின் புண்ணியத்தின் சாட்டுதலை பெற்றிருக்குமேயானால். அதே புண்ணியம் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பே சாட்டப் பட்டிருக்கக் கூடும் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில் நமது கர்த்தர் முன்னமேயே தம்மை அர்ப்பணம் பண்ணியிருந்தார். நிழ-ல் உள்ளதுபோல அவர் முன்னமே காளையை ப-யிட்டிருக்கிறார். யோர்தானில் நமது கர்த்தரின் அர்ப்பணம், பாவநிவாரண நாளில் காளை கொல்லப்படுவதை குறிக்கிறது; பூமியின் வாழ்க்கையை விட்டு விடுவதாக இருந்தது. இது அவர் முப்பது வயதாகும் பொழுது தமது சீஷர்களை அழைப்பதற்கு முன்னதாக செய்யப்பட்டது. அப்பொழுது தான் பிதாவானவர் அவரது ப-யை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார். ஏனெனில் பிதாவானவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நமது கர்த்தரை கொடுத்தார்.

அந்த ப- ஏற்றுக் கொள்ளப்படாதிருந்தால், நமது கர்த்தரை பரிசுத்த ஆவியினால் பிதாவானவர் ஜெநிப்பித்திருக்க மாட்டார்.

## நமது கர்த்தரின் ஊழிய காலத்தில் அப்போஸ்தலர்களின் நிலை

பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது, கிறிஸ்து கொடுத்திருந்ததை பிதாவானவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதற்கு ரூபகாரமாக இருக்கிறது. அவர் கல்வாரியில் முடித்த காரியம் யோர்தானில் ஆரம்பித்ததாகும். நமது கர்த்தர் இந்த காரியத்தை இதே முறையில் கருதி, தமது பிரசங்கத்தில் தமது சீஷர்களிடத்தில், தேவனிடத்தில் அவரை தங்களது பிதாவாக நினைத்து அவரிடம் ஜெபிக்க வேண்டும் என்று போதித்தார். எந்த யூதனும் இந்த மாதிரி இதுவரை செய்ததில்லை. கிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொண்டது தேவதூஷணம் என்று நினைத்து யூதர்கள் அவரை கல்லெறிவதற்கு கற்களை எடுத்துக்கொண்டார்கள். (யோவா 10:31-33) "எங்கள் பிதா" என்று சொல்லுகிறவர்கள் தேவனுக்கு தன்னை குமாரனாக ஆக்கிக் கொண்டவர்கள். யூதர்கள் யாரும் இந்த சொற்றொடரை பயன்படுத்தியதாக நாம் வேதத்தில் எங்கும் பார்த்ததில்லை; அவர்கள் எல்லோரும் வீட்டின் பணிவிடைக்காரர்களாக இருந்தார்கள்.

இயேசு சீஷர்களிடம் பேசும்போது தம்முடைய பின்னடியார்களை, தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக கருதியே பேசினார். அவர் பிதாவினுடைய பிரதிநிதி, அவர்களை அவர் தேவனுடைய ஏற்பாட்டிற்கு இசைவாக பெற்றுக்கொண்டார். "தேவன் ஒருவனை தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளாவிட்டால், ஒருவனும் என்னிடத்தில் வரான்"என்றும், "அவர்களை என் பிதாவின் கையி-ருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது"என்றும் கூறினார். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியை பெறுவதற்கு முன்பே அவர் இந்த வார்த்தைகளை கூறினார். அவர்கள் தெய்வீக குடும்பத்தில் முழுமையாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களாகவே இந்த கூற்றை சொன்னார். மேலும் அவர் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு" என்று அறிவித்தார். (யோவான் 6:47) இந்த சீடர்கள் அனைவரும் குமாரன் மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள். வேதத்தின்படி அவர்கள் அவரை பற்றிக் கொண்டிருக்கும் வரை-விசுவாசத்தினால் சுவிசேஷ யுகத்தின் நிபந்தனைகளின்படி, விசுவாசம், அர்ப்பணம் முத-யவைகளினால் பற்றிக் கொண்டிருக்கும் வரை, உண்மையான சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ஜீவனை பெற்றிருந்தவர்களாக கருதப்பட்டார்கள். யூதாஸ் செய்தது

**R5684 : page 142**

போல, யாராவது அவரை விட்டுவிட்டால், மறுபடியும் சாட்டுதல் மூலம் பெற்றிருந்த ஜீவனி-ருந்து மரண நிலைமைக்கு சென்றுவிடுவான்.

## அறிவை விலக்குதல் ஒரு ஆபத்தான காரியம்

யூதாஸ் சாட்டுத-ன்படி ஒரு புது சிருஷ்டியாக கருதப்பட்டான். இதன்படி எல்லா சீஷர்களும் மரணத்தில் இருந்து ஜீவனுக்குள் சென்றவர்களாகச் சொல்லப்பட்டார்கள். திரும்ப கொடுத்த-ன் காலத்தின் ஜீவனுக்குள் சென்றவர்களாக அல்ல, ஒரு புதிய ஜீவனுக்குள் சென்றவர்களாக சொல்லப்பட்டார்கள். ஏனெனில் கர்த்தர் இந்த சீஷர்களிடம் , அவரைப் பின்பற்றினவர்கள் பன்னிரெண்டு சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்கள் என்று சொன்னார். (மத்தேயு 19:28) அதாவது அரியாசனத்தில் அமரக்கூடிய நிலைமைக்குரிய ஜீவனுக்குள் சென்றார்கள் என்று குறிப்பாக உணர்த்துகிறது. அவர்கள் புதுசிருஷ்டி என்ற கருத்தில் பேசப்படுகிறார்கள். இது முடியும், ஏனெனில் நமது ஆண்டவரின் மரணம் வரைக்குமான அர்ப்பணத்தில் ஞானஸ்நானத்தின் மூலம் நுழைந்தார். உண்மையிலேயே பூமிக்குரிய அவரது உரிமைகளை விட்டுக்கொடுத்தார். பரீஷார்த்தமான உருவத்தில் இது நடக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் உன்னதத்தி-ருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவதற்கு இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளி சென்ற பிறகு அதிக நாட்கள் காத்திருக்கும்படி தேவன் தீர்மானிக்க வில்லை.(லூக்கா 24:29) எபிரேயர் 6:4-8 வசனங்கள் உண்மையிலேயே சபையை குறிக்கிறது. ஆனால் இரண்டாம் மரணத்தில் மரிப்பதற்கு இந்த நிலைமை மட்டும்தான் என்று விவரிக்கவில்லை. சபையினர் அனைவரும் இந்த தண்டனைக்கு உட்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வேண்டுமென்றே, தெரிந்தே பாவம் செய்தால், தேவனுடைய கிருபையின் அஸ்திபாரமாகிய கிறிஸ்துவின் மீட்கும் பொருளின் ப-யை மறுத-த்தால் இரண்டாம் மரணத்திற்கு செல்வார்கள். இரண்டாம் மரணத்திற்கு செல்லக்கூடிய நிலைமை வேறு எதுவும் இல்லை என்று இந்த வசனம் குறிப்பிடவில்லை. ஆயிர வருட யுகத்தில் சிலருக்கு இரண்டாம் மரண தண்டனை கொடுக்கப்படும் என்பதை நாம் காண்கிறோம்.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com